**தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய திடடமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆண்டின் போது ரூபா 116,616,000 இற்கான கட்டுநிதி விண்ணப்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன், ரூபா 117,612,650 தொகை விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. திறைசேரியினால் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த கட்டுநிதி ரூபா 108,053,408 தொகையாக காணப்பட்டது. அதன்படி திணைக்களம் விண்ணப்பிப்பதற்கு திட்டமிட்டிருந்த பெறுமதியில் 101 சதவீதத் தொகை மற்றும் விண்ணப்பிக்கப்பட்ட தொகையில் 92 சதவீதம் திறைசேரி திணைக்களத்திற்கு வழங்கியிருந்தது. | இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது குறிப்பிட்ட மாதத்தின் போது விண்ணப்பிக்கப்பட்ட மொத்த கட்டுநிதிகள் அதேவிதமாக அம்மாதத்தினுள் கிடைக்கப்படாமையால், அடுத்த மாதத்திற்குரிய கட்டுநிதி விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் கிடைக்காத கட்டுநிதிகளையும் அந்தந்த மாதங்களில் விண்ணப்பிக்கப்படுவதனாலாகும். | வருடாந்த மதிப்பீடு தத்துரூபமாகவும் பயன்தரு விதமாகவும் தயாரிக்க வேண்டிய தேவை. |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஏற்பாடுகளை மாற்றுதல் (நி.பி. 66) | | |
| (i) 2020 ஆண்டின் போது 02 செலவு விடயங்களின் ஏற்பாடுகளில் நி.பி. 66 ஏற்பாடுகளின் கீழ் 10 சதவீதம் முதல் 58 சதவீதம் வரை அதிகரித்திருத்தலும் 02 செலவு விடயங்களின் ஏற்பாடுகள் 13 சதவீதம் முதல் 16 சதவீதம் வரை குறைத்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருட ஆரம்பத்தில் காணப்பட்ட பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அவசர திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு அலுவல்களுக்காக தேவையான ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கும் நி.பி. 66 கீழ் ஏற்பாடுகள் பெற்றுக்கொண்டதுடன் Covid 19 காரணத்தினால் வாகனப் போக்குவரத்து வரையறுக்கப்பட்டமையால் சேமிக்கப்பட்ட ஏற்பாடுகளை அத்தியவசியமான செலவு விடயங்களுக்காக மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | வருடாந்த மதிப்பீடுகள் தத்துரூபமாவும் பயன்தரு விதமாகவும் தயாரிக்கப்பட வேண்டிய தேவை. |
| (ii) குறை மதிப்பீடு தயாரித்தல் | | |
| செலவு விடயம் ஒன்றிற்காக ரூபா 25,100,000 இற்கான மதிப்பீட்டு ஏற்பாடு ரூபா 5,000,000 இற்கான மேலதிக ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதன் மூலம் 20 சதவீதத்தால் அதிகரித்துக் கொண்டிருந்தது. | Covid 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் கடன் உடன்படிக்கைகள் கையொப்பமிடுவதில் தாமதம் மற்றும் அதன்படி IWWRMP செயற்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்த சாத்தியக்கூறு ஆய்வு உட்பட ஆரம்ப வேலைகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் அலுவல்கள் செயற்திட்டம் தயாரிப்பதற்காக வசதிகள் வழங்கும் (PPPF) நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 2020 திசெம்பர் 31 திகதி வரை மேற்கொண்டிருந்த காரணத்தினால் இணைந்த நீர் உதவி மற்றும் நீர் வளங்கல் முகாமைத்துவம் செயற்திட்டத்தின் ஆரம்ப தயாரிப்பு வேலைகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்வதற்கு மேலதிக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 08 செலவு விடயங்களுக்காக ரூபா 7,050,000 தொகை மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் அவ்வேற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் ரூபா 2,672,571 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த தேசிய ஏற்பாடுகளில் 11 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது. | Covid 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நிறுவனங்கள் மூடப்பட்டிருத்தல், வெளிநாட்டு பிரயாணங்கள் நிறுத்தப்பட்டிருத்தல், அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தமையால் அலுவலக உபகரண பராமரிப்பு செலவுகள் குறைவடைதல், உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படாமை மற்றும் சீருடைக்கு உரிமையுடைய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்றிருந்தமை மற்றும் வீதவரி உரிய நேரத்தில் செலுத்தியமையால் கழிவு கிடைத்திருந்தமை ஆகிய செலவுகள் குறைவடைந்திருந்தமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | - மேற்படி - |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு நெருங்குதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் SA 92 கொண்ட திரட்டிய பொறுப்புக்கள் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 783,629 தொகைக்கான 04 பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இதன் கீழ் காட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் தவறுதலாக ஆகஸ்ட் மாதத்தில் உட்படுத்தப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கலாக இருந்ததுடன், அவை அம்மாதத்திலேயே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த கொடுக்கல் வாங்கல் திசெம்பர் மாதம் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என SA 92 திறைசேரி அச்சுப் பிரதியில் காட்டப்பட்டுள்ள திகதிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிருப்பதற்காக ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்ததென கருணையுடன் அறிவிக்கின்றேன். | பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் உரிய முறையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஒக்தோபர் 09 திகதிய 2/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 3.4 இன் படி குறிப்பு இலக்கம் (iii) கீழ் காணப்படும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் கீழ் காணப்படும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரியினால் ஒவ்வொரு செலவுத் தலைப்பிற்கும் வழங்கும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றுடன் இணங்கியிருக்க வேண்டியிருந்ததுடன், அவ்வாறு அறிவிக்கப்படாத ஏதேனும் ஈடுபாட்டுப் பொறுப்பொன்று முன்னைய ஆண்டிற்கான செலவு என நடைமுறை ஆண்டில் தீர்க்கப்படாதிருக்க வேண்டிய போதிலும் திறைசேரியின் SA 92 திரட்டிய பொறுப்புக்கள் அறிக்கையில் காட்டப்பட்டிருக்காத கூட்டுத்தொகை ரூபா 264,291 இற்கான பொறுப்புக்கள் 2021 ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்தது. | ரூபா 264,291 இற்கான பொறுப்புக்கள் 2021 ஆண்டின் போது நி.பி. 94(1) மற்றும் (2) படி தீர்க்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கம் கொண்ட பொதுநிருவாக சுற்றறிக்கையின் பந்தி 6.1 மற்றும் 6.3 | சுற்றறிக்கையின் பிரகாரம் எல்லா அங்கத்தவர்களுக்கும் பயிற்சி வழங்கும் சந்தர்ப்பம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருந்த போதிலும் 93 பேர்களை கொண்ட பதவியணியின் 08 பேர் மாத்திரம் பயிற்சி வழங்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | அனைத்து உத்தியோகத்தருக்குமான மனிதவள அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆண்டில் நாட்டில் ஏற்பட்டிருந்த Covid நிலைமை காரணமாக திட்டமிட்டுள்ளவாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உத்தியோகத்தரை பங்குபற்ற வைப்பதற்கு முடியாமல் போனது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு கூடிய முயற்சி எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நி.பி. 880 | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தரினால் பிணை வைப்புக்கள் வைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு செயலாளரின் 2017 ஜுலை 28 திகதிய 01/2017 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களுக்கு உரிய கட்டடங்கள் தொடர்பாக முழுமையான மற்றும் சரியான தகவல்கள் கொம்டோலர் ஜனரல் அவர்களுக்கு 2017 ஒக்தோபர் 31 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை அவ்வாறு தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | கொம்டோலர் ஜெனரல் இற்கு உரிய முறையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், கொம்டோலர் ஜெனரலின் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் படி இந்த திணைக்களத்துக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் தொடர்பான தகவல்கள் அனுப்பும் போது, உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களின் நிதிப் பெறுமதி மாத்திரம் அவ்வறிக்கையில் குறிப்பிடுவதற்கு இயலாமல் போனது. தற்போது நிதிப் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெற்றிருக்கின்றமையால் அத்தகவல்களை கொம்டோலர் ஜெனரலிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக பதிவு செய்துகொண்டேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 திட்டமிடல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கம் கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கையின் 3(ஆ) பிரிவின் பிரகாரம் குறிப்பிட்ட வருடத்திற்கான நாளதுவரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போதுள்ள பதவியணி தொடர்பான விபரங்கள் மற்றும் எதிர்பார்க்கும் வெளியீடு / இலக்கு 2020 ஆண்டிற்கான | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்கு குறிப்பிட்டுக்கொண்டேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பெறுகைத்திட்டம் | | |
| | 2020 ஆண்டிற்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான ரூபா 1,300,000 இற்கான மதிப்பீடு பாதீட்டின் கீழ் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 465,611 தொகை தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அவை மதிப்பீட்டுச் செலவில் 36 சதவீதமாக காணப்பட்டது.ங | 2020 ஆண்டின் போது தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாண்டின் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சிலிருந்து எமது திணைக்களத்திற்கு தேவையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்தது. அதன் காரணமாக திட்டமிடப்பட்டிருந்தவாறு தளபாடங்கள் கொள்வனவு செய்யும் தேவை ஏற்படவில்லை. | தேவைகளை உரிய முறையில் இனங்கண்டு மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.1.2 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு 2401 செலவுத் தலைப்பின் கீழ் பதவியணியினர் பயிற்சி வழங்குவதற்காக ரூபா 1,500,000 இற்கான வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 06 பயிற்சி வழங்கும் சந்தர்ப்பங்களுக்காக 08 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 794,770 தொகை செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டுச் செலவில் 53 சதவீதம் ஆக காணப்பட்டதுடன் சேமிப்பு 47 சதவீதம் ஆகும். | நாட்டில் நிலவிய Covid தொற்றுநோய் காரணமாக திட்டமிட்டவாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களை சமுகமளிக்க வைப்பதற்கு முடியாமல் போனது. | தேவைகளை உரிய முறையில் இனங்கண்டு மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் வலைதளத்தில் 2020 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை உட்படுத்தப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய மே 12 திகதி வரை 2018 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2017 ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை உட்படுத்தப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. | வலைதளம் உரிய முறையில் நாளதுவரை ஆக்குவதற்கு குறித்துக் கொண்டேன். | வலைதளம் உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட வேண்டிய தேவை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் அதன் கீழான சுட்டிகளை முதன்மைப்படுத்தி நிறுவனத்தின் குறிக்கோள் மற்றும் சுட்டிகளை இனங்காணல் மற்றும் நெருங்குதல் தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் படி மீளாய்வாண்டில் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக செயற்பட்டிருந்தமை கணக்காய்விற்கு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அடிப்படை பணிப்பொறுப்பு தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (National Development Framework) தயாரித்தல் மற்றும் அதனை கடைபிடித்து உரிய அமைச்சுடன் கொள்கைத் தீர்மானம் மற்றும் அந்த அமைச்சுக்களினால் தயாரிக்கப்படும் செயற்திட்ட பிரேரணைகளை மதிப்பீடு செய்தலாகும். அதன்படி தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால், அரச அபிவிருத்தி கொள்கைகள் சட்டகம் தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் குறிக்கோள்களுக்கு கவனம் செலுத்தப்பட்டது. அதேபோல், இந்த நிறுவனம் செயற்திட்டங்களை மதிப்பீடு செய்யும் போதும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு கொள்கை அடிப்படையில் தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்கும் நிறுவனமொன்றாகும். | நெருங்கக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக கவனம் செலுத்தி குறிப்பிட்ட திட்டங்களை தயாரித்தல் மற்றும் குறிக்கோள்களை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

5. மனிதவள முகாமைத்துவம்

5.1 இணைந்த பதவியணி, உள்ளவாறான பதவியணி மற்றும் ஆளுக்குரிய சம்பளங்கள் வேதனங்களுக்கான செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) இணைந்த பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி** | | |
| i. திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள 118 பதவிகளில் 25 பதவிகள் வெற்றிடமாக காணப்படுவதனால் அவை அங்கீகரிப்பட்ட பதவியணியில் 21 சதவீதமாக காணப்பட்டதுடன், சிரேஷ்ட மட்டத்தை சேர்ந்த பணிப்பாளர் பதவிகள் 05 உம், உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் 06 பதவிகளும் உட்பட 11 பதவிகள் பல வருட காலமாக வெற்றிடமாக காணப்படுவதுடன், ஆட்சேர்ப்பதற்காக போதியளவு இடவசதிகள் காணப்படவில்லை என திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமை திணைக்களத்தின் செயலாற்றுகையை பாராட்டக்கூடிய மட்டத்தில் வைத்திருப்பதில் பாதிக்கக்கூடியதாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்திற்கு தேவையான இடவசதிகளை வழங்கும் படி பல சந்தர்ப்பங்களில் நிதியமைச்சிடம் வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டது. இட வசதிகள் கிடைத்த பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை முறைப்பிரகாரம் நடாத்திச் செல்வதற்கு செயற்பட வேண்டும். |
| ii. தாபனக் கோவையின் பிரிவு 13.3 இன் பிரகாரம், பதவியொன்றிற்கு முழு நேர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையெனின், நிரந்தர நியமனம் தாமதம் இன்றி செயற்பட வேண்டும் எனினும், திணைக்களத்தின் நூலகர் பதவி 08 வருடங்களை மிகையான காலம் வெற்றிடமாக காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் நூலகர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அரச சேவை அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை முறைப்பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |